உ

சிவமயம்.

கண்டனூர்,

ஸ்ரீமீனாட்சி சுந்தரேசுரர்

# கப்பற் சிந்து.

இது

பெரி. கண. பழ.

விலாசத்தார் விருப்பத்தின்படி

கண்டனூர்,

நா. பெ. நா. மு. முத்துராமையா

அவர்களாலியற்றப்பெற்றது.


தேவகோட்டை

"எஸ்டேட் பிரஸில்"

பதிப்பிக்கப்பெற்றது.

இரண்டாம் பதிப்பு.

1920.

# சாற்றுக்கவி.

வெம்பத்தூர் சங்க வித்துவான்களிலொருவராகிய

சா. ஆ. சௌந்தரபாரதியார்

இயற்றியது.

---

சீரினு யர்வரங் கண்டனூர்
　சிறக்க வமர்சுந் தரமீனன்
பேரிற்கப் பற்பாட்டுச் செய்தான்
　பெருமை பெற்றத னவனிகத்
தாரிலுயர் பிரமனித் இயாப்ர
　சாரண மாருசடையை யமைத்த
நேர்தலுள் எழுத்தி ரமையை
　சீமானே வெங்கடவ ருமானே.

---

உ

சிவமயம்.



# கண்டனூர்,

## ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுரர்

# கப்பற்சிந்து.

ஏலேலோ தத்தய்யா கப்பல் ஏலேலோ.

சீர்வளருந்தனவணிகர்—திகழுஞ்
சிறந்தகண்டனூரதனில்
ஏர்வளர்மீனாட்சிசுந்த—ரேசற்
கிசைந்த கப்பற்றமிழுரைக்க

(முடுகு)

அளவிலாச்சுந்தரனம்பிகைபுகந்தோ, னன்பருக்கருள்புரியுமானந்தவடிவோன், புளகமாங்கரவாரணத்துமுகயோகன், பொன்னுலகோர்முதற்போற்றும்வைபோகன், வளமானவல்லபையையிடம்வைத்தமோகன், வாசாமகோசரமாகின்றசொரூபன், உளதானகிரியைக்குமுன்னுற வணங்குமுத்தமர்க்கருள்புரியுமைங்கரன்றுணையே.

(ஏலேலோ)(௧)

தேசமெல்லாம் புகழுங்கண்ட—னூரிற்
செல்வசுந்தரேசர்மீனாள்
வாசமுள்ள கப்பலுமே—மிக்க
மகமேரு போல் விளங்கும்.

(முடுகு)

வேதமெனுங்கடலிலே செல்லுகின்றதான, விஸ்தாரமாங்கப்பலாகமங்களாகும், போதமாம் புராணங்களோராவுமாகும், பொற்புமிகுசாஸ்திரந்தட்டுக்களாகும், ஏதமில்லாமிருதியாய்மரமதாகு, மெழிலானகீதையுஞ்சுக்கானிதாகு, நாதனுஞ்சற்குருமாலியவானாய், நன்மையாம்வாதனைப்பாய்க்கட்டியோட்ட. (ஏலேலோகப்பல்) (2)

சோலைமிகச்சூழுங்கண்ட—னூரிற்
சுந்தரமீனாம்பிகையாள்

சாலமிகுங்கப்பலுக்குத்—தக்க
சாதுக்களேயெசமானும்.

(முடுகு)

தூலசூக்குமமான காரணதேகஞ், சொந்த மாயபிமானம் வைத்துமேவிடயஞ், சாலவேசென் றபிசுராகத்துவேஷஞ், சகியாத காமமோடு குரோத லோபங்கள், ஏலமுளமோகமதமச்சரம சூதை, யிரிசைடம்பமுடனதற்பமாங்காரம்,கோல முளதப்புவஞ்சனைசோரமிடும்பை, கொலைமுதற் பாவிகளை யேற்றாமல்விட்டு. (ஏலேலோ) (3)

மங்களமாய்மகிழுங்கண்ட—னூரில்
வள்ளல்சுந்தரேசர்மீனாள்
துங்கமதாங்கப்பலுக்கு—ரிஷபத்
துடிக்கான கொடிகட்டி.

(முடுகு)

தாரமர்விவேகனெடுநிருபகன் பொறுமை, சந்தோட னெடுசமன்றமன்விராகன்றான், ஆர் மருவுமியமாதியெண்மர் சத்துவனும், அமுத சீலன்சாந்திவிசாரசந்தோடன், ஏர்மருமயித்திரி முதிதையொடுபேட்சை, யியல்பானகருணையுள முத்தர்களையேற்றி, ஓர்மறுவிலாதபரிபூரணவூருக் குடனேசென்றிறங்கி மிகவானந்தமுற்றார். (ஏ)(4)

தனவணிகர் சூழுங்கண்ட—னூரில்
சம்புசுந்தரேசர் மீனாள்
மனமுள கல்யாணமது—நடத்த
மாணிக்கக்கப்பலுமே.

(முடுகு)

வங்காளம் வெம்பாயிபட்டண மிலங்கை மாநகர்போய்வரமாதமூன்றாகுங், கங்கைபோற் செலமதைப் பீப்பாயடைத்துக், கணக்குடனரிசி முதற்சாமான் சமைத்துச், சிங்காரமானதோர் பாய்தனையெடுத்துத், திடமானகயிறுகளைச்செம் மையாயிறுக்கி, எங்குமீனக்கொடியிலங்கவேகட்டி யிதமானமார்க்கத்திற் சுக்கானைத்திருப்பி, அங்க முளமானகப்பித்தான்களைத்தட்டி, யன்புடன்மீனா ட்சியையகத்தினிற்கொண்டாடிக், தங்காமலோங் கிவருமலைகளைப்பார்த்து, தண்ணீரைவெட்டைக் குழல்வேம்பாயாற்றட்டிப், பொங்கியேகடலூரங் கொள்வதைப்பார்த்துப், பொலிவானவிடமதில் நங்கூரத்தைப்போட்டுத், தங்கமுளசவுக்காவைப் பார்த்துமேயோட்டிச், சூழவேதோணிசுருப்போ டுடன்கூட்டு, மங்காதசீனிக்கண்ணாடியைப்பார் த்து, மட்டிலாப்பீரங்கிவேட்டுகளைத்தீர்த்துச், சங் கமாய்ப் பாறைமலையாதியைச்சார்ந்து, தட்டா மல் மகரமீன்முட்டாமலோட்டு, இங்கொருமூலை யிற்றோணுதொருகப்பல், எக்காமலதைநோக்கிச் சுக்கானைத்திருப்பு, பிங்கலந்திசைதனிற்பிசகாமற்

பார்த்துப், பெருக்கான தண்ணீரிற் சுருக்காக விட்டு, வாங்காளம்துறைமுகம்வந்திடப்பாரு,வழி யாயிரங்கிமிகச்சாமான்களைவாங்கு (ஏலேலோ) (5)

கழனிமிகச்சூழுங்கண்ட—ஊரில்
கன்னிமீனுட்சிசொக்கர்
வழியானகப்பலுக்குத்—தெளிவாய்
வாங்குகின்றரத்னவகை

## முடுகு

இந்திரன்றன்னுல்வலாசூரன்முன்னு, விறந் திடவவனுடலெலும்பெலாம்பண்டு, தந்திரவாத் தினுல்ரத்தினமுமாகிச், சமைந்ததுவே வாட்டிலத் திலுண்டான, சுந்தரமாய்த்தோற்றுமிவையெலாம் பார்க்கச், சுடரொளிவிட்டிலங்கு துசக்கமேயாக, சந்திரன்போல்விளங்குமுத்துத்தானிதுவோ,தகை மையாந் தூத்துக்குடிச் சமுத்திரத்திலுண்டாம், அந்தமதாமிந்தவயிரமோமிகவு, மதிகமாஞ்சிங்கப் பூர்பினுங்கிலமரிக்கா, சொந்தமுளமாணிக்கமாகு மிதுமெத்த, துலங்கிடும்ரெங்கோன் அவாவுசீனத் தில், தந்திரமாய்க்கிடைத்ததாமிந்தக் கோமே, தகமதுமகப்படாத்தரணியிற்சுருக்காய், வந்ததிந் தப்பவளமதுதானுமேயெங்கும், வாங்கவுமகப் படாவங்காளமன்றி, நந்தமதாகும்வைடூரியமெங் கும், நாளுக்குநாள்விலைகூடவேயர்கும், புந்தியி னுணர்ந்திடப் போகுமோவிந்தப், புட்பராகந்தா

னுங்கிடைத்திதுமாத்திரஞ், சிந்தையில்நினையாது வந்ததிந்தநிலம், தேவலோகத்தி லுண்டானது போற்சொல்வர், பந்தமாமரகதப்பச்சையிதன் பெருமை, பகர்வதற்குச்சேடனும்போதாதுபார்த் தால், எந்தவுலகத்திலுங்கிடையாதிதெல்லா, மிப் போதுகிடைத்ததுமீனாட்சிகிருபை. (ஏலே) (6)

கண்டனூருவந்திருக்கு—மெங்கள்
கன்னிமீனாட்சிசுந்தரர்
தொண்டர்புகழ்கப்பலிலே—வருஞ்
சுயமானசரக்குவகை.

(முடுகு)

சுக்குதிப்பிலிமிளகுவெங்காயம்பூண்டு, சுய மானவெந்தயங்கடுகுகற்பூரம், துவரானகடுக்காய் சுதகுப்பைமேயாமம், சொல்லொணாப்பெருங்காயம் அபினியொடுகஞ்சா, மிக்கநல்மிளகாய் கல்லுப் புடன்மிளகு, வெட்பாலேயரிசிசிறுநாகப்பூ ஏலம், மேலான சாதிக்காய்சாதிப்பத்திரியும், வேகமுள ராம்புடன்வாய்விளங்கமதுவுந், தக்கஅக்ரகாரம் அதிவிடையமஞ்சள், சடாமஞ்சி லவங்கமொடு தாளிசபத்திரியும், தக்கோலம்வலம்புரிக்காய்கொ த்தமல்லி, தன்மையுளசீரகமரத்தையொடுகூகை, பாகமுளகோதுமைகொத்தமலியரிசி, பகரொணாச் சுவ்வரிசிபச்சரிசிமஞ்சள், பண்பானபேரீச்சம்பழ மோடுமுந்திரிப், பழமெலாம்வந்ததமே பரிவுட னிறங்க. (ஏலேலோ) (7)

மன்னுலகோர் போற்றுங்கண்ட—னூரில்
மகிழுஞ்சுந்தரேசர் மீனாள்
தன்னையமாங்கப்பலிலே—வந்த
நயமானபட்டுகளாம்.

(முடுகு)

அணியானமேகலை காஞ்சி கும்பகோணம், அழுத்தமுள்ளநாகமடிப் பட்டுடன்மதுரைத், தினியான பொற்சரிகைச்சேலையொடுவர்னச், சேலைகளுஞ்செல்வமீனாட்சிக்குக்கொடுக்கத், துணிவான சகம்பிரட்டி வேலுதார்ப்பட்டுத், தூய்தானசம்பந்திக்காகுமிதுகட்டு, பணியாகப்பாடுமிந்தப்பெண்களுக்குயர்ந்த, பஞ்சவர்னச்சேலைபார்த்துமேயுவப்பக், கனிதமுள்ளநாத்திமார்க்காகுமிந்தருத்ர, கண்டிச்சேலையையெடுத்துக்கட்டிடன்பத்திரம், மனியானமாமிமார்க்காகுமிந்தச்சிந்தா, மணிச்சேலை வாங்கியேவகையுடன்சேர்க்கத், தணிவிலாக்கோலமிடுஞ்சாந்திமாரணியத், தக்கதிதுசவுக்காளிகடலைப்புட்டாணி, குணியானபாங்கியர்க்குலங்கார கண்டி, குணமானசேடியர்க்குச் சொர்னமுகிச்சேலை, பிணியானதைநீக்கு விழிபிரட்டிச்சேலை, பேதைவெள்ளாட்டிக்குக் கொடுக்கலாம் பேனு, இணையிலாச்சிட்டர்களுக்காகுமிந்தசால்லை, யெங்குமேயகப்படாவங்காளமன்றி, மணவரைக்காகுமிந்தக்குண்டஞ்சிச்சேலை, வாங்கிவைத்தபோதுகொடுக்கவாரோர்த்தி. பழி[illegible]லைவழியாடுதாம்ப

ரங்கள், பெரியோகட்காகுமிதுபேணியேகொடுக்கத், துணையானமன்னர்க்குக்கொடுக்கத்தானுயர்ந்த, துப்பட்டாகெண்டைச்சீர் தப்பாமலிருக்க, பணியானபட்டணஞ்சேலநாமக்கல், வங்காளங்கும்பகோணத்திலுளதான, கனிசமுள புடவையிலுசுந்தரார்மீனாட்சி, கல்யாணமுன்னிட்டுவாங்கி வந்ததிதுவே. (ஏலேலோ) (8)

மேலாமீனார் போற்றுங்கண்ட—னூரில்
விமலர்சுந்தரேசர்மீனாள்
மாலானகப்பலிலே—பொழுங்காய்
மன்னர்வரும்வரிசைகளாம்.

(முடுகு)

அன்புமிகு அங்கமருணம்முடனவந்தி, ஆந்திரமிலாடமிகுயவனமொட்டியமும், அன்னடங்கன்னடம்காசங்காஷ்மீரம், காந்தாரங்காம்போசங்கருசமுடன்கலிங்கம், கொன்னுதவுகோசலங்குருகுகுடகஞ்சேர், குந்தளங்குருவிந்தங்கூர்ச்சரங்கொல்லம், தென்னவன்கிராடமொடுசால்வஞ்சவ்வீரஞ், சிங்களஞ்சகஞ்சிந்துசீனகொங்கணமும் சொன்னதயமாஞ்சோழசோனகந்துளுவஞ், சூரசேனந்திராவிடம்தெங்கணமும், நின்மலமதானதோர்நிடதகேகயமும், நேர்பாளபாஞ்சாலபப்பாபல்லவமும், மன்னுபோடம்புலிந்தமகதமொடுமச்சம், மாளவமராடமொடுமலையாளம்வங்கம், நன்ன

யமதாபுகந்தவங்காளம்விதர்ப்பம், நாட்டரசாண் பத்தாறார்பேரும்வந்தனரே. (ஏலேலோ) (9)

சுந்தரமாய்விளங்குங்கண்ட—னூரில்
சுந்தரமீனாம்பிகையாள்
அந்தமுள்ளகப்பலிலே—வந்த
அபிஷேகச்சாமானும்.

(முடுகு)

சந்தனங்குங்குமங்களபகஸ்தூரி, தகைமையாம்பச்சக்கற்பூரஞ்சவ்வாது, அந்தமுள்ளகோரோசனைகொச்சிமஞ்சள், அருமையுளசெந்தூரம்வங்காளம்பச்சை, சிந்துதேசாம்பிராணித்தயிலஞ்சம்பங்கி, சிறப்பான வெம்பாயிப் பன்னீரும்புனுகும், கந்தமுள்ளவெட்டிவேர்விலாமிச்சைவேருங், கணக்கிலமையாததாவிளக்கமாய்வைக்க,

(ஏலேலோ) (10)

---

கல்விமிகவிளங்குங்கண்ட—னூரில்
கவுரிமீனாட்சிசுந்தரர்
செல்வமதுவளர்ந்தேறக்—கருணை
சிறக்குங்கப்பற்பாட்டிதுவே.

(முடுகு)

வேதப்பிராமணர்கள்மிகவோங்கவாழி
வெண்குடையரசர்தஞ்செங்கோலும்வாழி

ஈகருணைவளர்க்குருகுக்கிராமம்வாழி
நிலைபான அறம்பொருளின்பமும்வாழி
சாக்ஷாத்தானமீனாட்சிசுந்தரேசர்
துங்கமையபுனகல்யாணமிக்கடக்கவாழி
சகருணைவேதாந்தசாஸ்திரமும்வாழி
சாகவிக்கவிதிக்கஞ்சேனாஅமவாழி. (உ. நீலை)

கட்டப்பறிங்கு முற்றிற்று.